1974 மார்ச் 26]

என்று கருதுகிறேன். ஏராளமான விவசாயிகள் போட்டியிலே கலந்துகொள்கின்ருர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்த வரையில் நன்ருக இதைப்பற்றி எல்லோரிடமும் சொல்ல லாம்.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Hon. Minister the highest yield recorded in this year and the name of the gentleman who has got that highest yield?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : கடைசியாக எடுக்கப் பட்ட தகவல் 1972-ல் தான் கொடுக்கப்பட்டது. முதல் பரிசு பெற்றவர் கே. பி. துரைசாமி, ஈரோடு தாலுகா, விளைவித்தது 4618 கிலோ. இரண்டாவது பரிசு சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பாப்பி ரெட்டியார் 3642 கிலோ. தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த நஞ்சப்பகவுண்டர் மூன்ருவது பரிசைப் பெற்ருர் அவர் விளைவித்தது 2,732 கிலோ.

தெளிப்பான்கள் வாங்க மானியம்.

*618 வின—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தீவிர சாகுபடி நெல்வகைகளைப் பயிரிடும் உழவர் களுக்கு அவர்களே ஸ்பேயர்களை விலைக்கு வாங்கிக்கொள்ள பாதி விலையை மானியமாகக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரமென்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஒன்றியங்களின் மூலமாக ஸ்ப்ரேயர்கள் தீவிர நெல் சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. வாடகைக்குத் தரப் படுகிற காரணத்தினுலே அடிக்கடி பழுதடைந்தும் விவசாயிகள் சரியான முறையிலே வைத்துக்கொள்ளாத நிலையும் இருக்கின்றன. அவர்கள் சொந்தமாக வைத்துக்கொண்டால் சரியான பராமரிப்பு இருக்கும். இப்பொழுது பருத்தி, கரும்பு போன்றவைகளுக்கு

அப்படிப்பட்ட சலுகைகள் தரப்படுகின்றன. ஆகவே நெல் வகைகளுக்கும் அப்படிப்பட்ட சலுகைகளைத் தருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கொடுக்கப்படுகிற ஸ்ப்ரேயர்கள் இனமாகவோ அல்லது மானியமாகவோ கொடுக்கப்படுவதில்லை. 17 ஆயிரம் பவர் ஸ்ப்ரேயர்கள் இருக்கின்றன. இந்த ஆண்டும் ஒரு ஆயிரம் அதிகமாகக் கூட்டுவதாக இருக்கிறோம். 72 ஆயிரம், கையினால் தெளிக்கின்ற, கைத் தெளிப்பான்கள், இருக்கின்றன. அந்த அந்த வட்டாரங்களில் வைத்துக்கொண்டு குறைந்த பட்ச வாடகைக்குக் கொடுத்து விவசாயிகளுக்கு உதவி செய்துகொண்டு வருகிறோம்.

அம்பாசமுத்திரம் அரிசி ஆராய்ச்சி நிலையம்

*619 **வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

அம்பாசமுத்திரத்தில் உள்ள அரிசி ஆராய்ச்சி நிலையம் தற்சமயம் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சி பற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இது அம்பாசமுத்திரத்தைப் பொறுத்தது, அதுபற்றிய விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டு இருக்கிறது.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியின் விளைவாக மக்களுக்கு என்ன என்ன நன்மைகள் கிடைக்கின்றன என்பதை ஆராய்வதற்காகப் புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டனவா? இந்த ஆராய்ச்சியில் செலவழிக்கப்படும் செலவு பயனுள்ளதாக இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அம்பாசமுத்திரத்தில் நடத்தப்படுகிற ஆராய்ச்சியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவர்களுடைய தொகுதிக்கு மிக அருகிலே அது இருக்கிற காரணத்தினாலே பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

@ 356-358-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.